செய்தி வெளியீடு எண் : 223 நாள் : 03.02.2023

**<u>மாண்புமிகு செய்தி துறை அமைச்சர் திரு. மு. பெ. சாமிநாதன் அவர்களின் இரங்கல் செய்தி</u>**

தாதாசாகெப் பால்கே விருது பெற்றவரும், பிரபல பிரபல இயக்குனரும், பழம்பெரும் நடிகருமான திரு.கே.விஸ்வநாத் (வயது 92) அவர்கள் 02.02.2023 அன்று உடல்நலக் குறைவினால் காலமானார் என்ற செய்தியை அறிந்து மிகுந்த மன வருத்தம் அடைந்தேன்.

திரு.கே.விஸ்வநாத் அவர்கள் சங்கராபரணம், சலங்கை ஒலி போன்ற காலத்தால் அழியாத எண்ணற்ற திரைக்காவியங்களை இயக்கியவர் ஆவார். அன்னாரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு, அவரது பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கும், திரைத்துறையைச் சார்ந்த நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in